# தமிழர் பண்பாடு

பழங்கால மக்கள் காடுகளில் விலங்குகளை வேட்டையாடி அதன் புலாலை உண்டனர். மரவுரிகளையும் இலை தழைகளையும் ஆடையாக உடுத்தினர். குகைகளிலும் மரப் பொந்துகளிலும் வாழ்ந்தனர். அவர்களுடைய நாகரிகம் அவ்வியற்கை வாழ்வோடு இணைந்ததாய் இருந்தது. ஆனால் இன்று மக்களின் உணவு, உடை உறையுள், பழக்கவழக்கம் முதலானவற்றில் வியத்தகு மாற்றங்களைக் காண்கின்றோம். மக்களின் இத்தகைய புறத்தோற்ற வளர்ச்சியினை நாகரிகம் என்பர். இது நாட்டுக்கு நாடு காலத்துக்குக் காலம் மாறிக்கொண்டே வரும் இயல்புடையது.

உள்ளத்தினின்று வெளிப்படும் இயல்புகள் பண்பாடு எனப்படும். இது சொல்லாலும் செயலாலும் வெளிப்படும். பண்பாடு என்றும் மாறாத் தன்மை உடையது. இப் பண்பாடே உலக உறவாக வளர்கின்றது. மேலும் தமிழர் பண்பாட்டில் மானம் தலைசிறந்தது. மானம் என்பது ஒருவன் தன் நிலையிலிருந்து தாழாதிருப்பதும் தாழ்வு வரும் போது உயிர் வாழாதிருப்பதும் ஆகும். தமிழர் மானம் இழந்து உயிர் வாழ விரும்பமாட்டார்கள்.

பலநூறு ஆண்டுகளுக்கு முன் சேரநாட்டைக் கணைக்கால், இரும்பொறை என்ற மன்னனும் சோழநாட்டைச் செங்கணான் என்னும் மன்னனும்  ஆண்டு வந்தனர். இவ்விரு பெரு மன்னர்களும் தமிழ் மண்ணின் மரபுக்கேற்ப வீரம் பெரிதெனப் போற்றி வாழ்ந்தனர். ஒருமுறை இருவருக்கும் மூண்ட போரில் இரும்பொறை தோற்றுப் போனான். இறுதியில் இரும்பொறை சிறைப்பிடிக்கப்பட்டான். சிறையில் விழுப்புண்பட்ட அவன் வலியால் துடித்தான். நீர் வேட்கையால் தண்ணீர் கேட்டான் காவலனிடம். காவலனோ மன்னனுக்குரிய மாண்பினை அளிக்காது காலம் தாழ்த்தி குவளையில் நீர் கொண்டுவந்து ஏளனத்தோடு தரையில் வைத்துச் சென்றான். பகைவர் கைபட்டு மானம் இழந்து இரந்துண்ணும் நிலை வந்ததே என்று அந்நீரைக்கையாலும் தொடாமல் மானமே பெரிதென உயிர் நீத்தான்.

பிறருக்குக் கொடுத்துப் புகழ் பெற்று வாழ்வது தமிழர் பண்பு. அள்ளிக் கொடுக்கும் கொடைப் பண்பினர் தமிழ் மன்னர். முதிரைமலைப் பகுதியை ஆண்ட ஒரு குறுநில மன்னன் குமணன். இவன் தன்னை நாடிவரும் இரவலருக்கு என்றும் இல்லை என்று சொல்லாமல் அள்ளிக் கொடுக்கும் வள்ளல். இவன் இளவல் இளங்குமணனின் செயலால் ஆட்சிப்பொறுப்பை விடுத்துக் காடு சென்று வாழ்ந்து வந்தான்.

குமணனையே மக்கள் புகழ்வதைக் கண்ட இளவல் இளங்குமணன் அவனை அழித்துவிட எண்ணினான். குமணனின் தலையைக் கொண்டு வருவோருக்குப் பதினாயிரம் பொற்காசுகள் என்று அறிவித்தான். அந்நேரம் குமணமன்னனைக் காண பெருந்தலைச்சாத்தனார் என்னும் புலவர் காட்டுக்குச் சென்றார். புலவரின் வறுமை நிலை அறிந்து கொடுப்பதற்கு பொருள் ஒன்றும் இல்லையே எனக் குமண மன்னன் வருந்தினான். தன் தம்பி தன் தலைக்கு அறிவித்த விலை நினைவுக்கு வந்தது. உடனே புலவருக்குத் தன் தலையை வெட்டித்தர முன்வந்தார். இதிலிருந்து அவருடைய கொடைப்பண்பை விளங்கிக் கொள்ளலாம். வீரம், மானம், கொடை, போன்ற பண்புகளில் உயர்ந்து நிற்கும் தமிழர், ஒழுக்கத்தையும் உயிரிலும் மேலாகப் போற்றினர். ஒழுக்கத்தால் சிறந்தோரை தமிழர் ‘சன்றோர்’ எனப் பாராட்டினர். அத்துடன் தமிழர் விருந்தோம்பற் பண்பாட்டிலும் சிறந்து விளங்கினர். நாம் எங்கு வாழ்ந்தாலும் எமது பண்பாட்டை என்றும் மறவாமல் பேணுவோம்.